


EJ 06 CITAACC JOURNAL 2026 | JULY

# திருக்குறள்



**குறள்:**

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (அதிகாரம் 80 குறள் 7)

**விளக்கம்:**

ஒருவனுக்கு நல்ல ஊதியம் என்பது,
அறிவற்றவர்களின் நட்பினை
ஒதுக்கி விடுவதே ஆகும்.




Dear Friends

Happy to see you all in this July issue of the e-Mag of CITAACC. It is quite satisfying that the issue of the e-Mag is growing stronger from issue to issue. The articles and information shared in the magazine benefit all. This apart, this is also a platform where skills can be harnessed, sharpened, and fine-tuned.

The recently concluded World Cup Football tournament saw vibrant action amongst the competing teams of different countries. More than the players, the fans of the football game were all the more interesting with frenzied happiness, ecstasy, thrill, and high fever culminating towards the final game.

It is this frenzied action, which is etched in one's memory, which has to wait to evaporate till the curtains of the next FIFA World Cup unveil after four years. If such an action, feeling, vibration, sense of joy, is documented well, this could be nothing but a wonderful memoir, which can be savoured any time, from now.

At this juncture, I am to acknowledge with gratitude two different gestures; the first one, the interesting article on a tour abroad, by a ward of one of our senior members. This article, written in a crisp, fluent manner, is special because it is from one of the family members. This, I believe, would inspire many more to follow suit and contribute to the e-Mag.

The second gesture is the valuable support, issue after issue, lent by none other than our **V.P., Mr. M.Ramesh**, in soliciting and fetching sponsorship Ads for our magazine. The confidence he poses on the magazine quality and unrelenting advocacy for the support is praiseworthy. We take time, to sincerely thank his efforts, appealing to all concerned to support by way of material and financial resources, for the magazine.

Till we meet issue next,

Good bye

Yours affectionately

***Editor***

**பொறுப்பு துறப்பு:**

இந்த இதழில் வெளி வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் அனைத்திலும் உள்ள கருத்துக்களின் உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை, துல்லியம், பொருள் ஆகியவற்றிற்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாவார். CITAACC மின்னணுஇதழின் ஆசிரிய குழுவோ, CITAACC குழுவோ எவ்விதத்திலும் பொறுப்பாகாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் குழு

# FROM THE PRESIDENT'S DESK



P.Saravanaraja
President - CITAACC
1988 - Civil

Dear friends,

I take this opportunity to welcome the new team that has taken over the CITAA at our CIT campus, Coimbatore, under the leadership of Mr.Karthikeyan of the 98 batch.

I wish the new team does wonders in the next 2 years towards alumni development and networking. I also need to mention the good work done by the outgoing team under the leadership of Mr.Marimuthu bro of 78 batch as its President and Dr.Gunasekaran of 86 batch as its Secretary.

Our team at CITAACC is fully geared to execute the Run for Fun event scheduled on 9th August 2026. This is going to be one of the best events ever conducted with all your support. We sincerely look forward to volunteers at the ground level to make this event a successful one.

Whether you jog, walk or do not do so, your support as a volunteer will add value to us. Please contact any of the organisers to join the volunteers team .

Excited to see you on 9th August at Besant Nagar Beach.

Best wishes

**P.Saravanaraja**

# FROM THE SECRETARY DESK



**Ashokraj Vadivelu**
Secretary - CITAACC
1993 - Mechanical

Time is flying by, and every day seems to bring-in something new and exciting. We are now gearing up for the much-awaited **Walk/Run Event** scheduled on 9th August. The response has been overwhelming, and the event is shaping up to be a grand success. Thanks to the dedication and meticulous planning of our organizing team, every aspect is being handled with great care and attention.

I am also pleased to share that our **data verification initiative** is progressing steadily, with the team having already verified over **600+ records**. We expect to complete this exercise within the month. While we already stay connected through WhatsApp, having a well-maintained and accurate directory will make it much easier for us to reach out and support members whenever there is a need.

My wishes and greetings to the newly formed CIT alumni association!

Our community continues to grow stronger, bringing together a remarkable network of entrepreneurs, business leaders, and professionals occupying key decision-making roles. The question before us is, "**How can we collectively leverage this strength to serve our community and society more effectively?** " We regularly see our Alumni Vijay leading by example through his various service initiatives and sharing them with us. Can we do more? How can each of us contribute and make a greater impact?

With that thought, I conclude my message for this month. I look forward to seeing you all at the Walk/Run event and connecting with everyone in person very soon

Warm regards,
**Ashokraj Vadivelu,**
CITAACC

# Fire Side Chat



R. Muthukumar
1995 - Chemical

Chat featured **Subra Kumaraswamy of 1988 batch.** Subra did his Master's degree in Computer Science from Clemson University and his stellar career spans stints with Andersen Consulting, Netscape, Lycos, Sun, eBay, Intuit and is current **SVP & Chief Information Security Officer at Visa**. He was in conversation with Kalilur Rahman, an alumnus of the 1996 Computer Science. Kalil has led large-scale transformation initiatives during his stints with TCS, Cognizant, Accenture, and Novartis.

The event was attended by 60 odd CITAACC Members and their family. Event started with Tamil Thai Vazhthu, followed by a welcome address by Th.Muthukumar, Joint Secretary (Tech). Th.Saravana Raja delivered his presidential address soon after. Post that, Fireside chat kick-started with Th. Kalil setting the context and firing Th.Subra with queries spanning AI, Cybersecurity, Leadership and Future of work.



**Key Theme #1: AI is Still in Its Early Days**

- Subra reportedly compared today's AI era to the **"iPhone 1 stage"** of a major technology revolution.
- The implication is that organizations should focus on learning and adaptation rather than expecting today's tools to be the final form of AI.
- **Adaptability** was highlighted as the most important professional skill.

**Key Theme #2: Cybersecurity Becomes Mission-Critical**

- AI increases both defensive and offensive cyber capabilities.
- Cybersecurity was described as a business survival requirement rather than merely an IT function.
- Discussion included proactive defense and the mindset of a security leader anticipating threats before they emerge.

**Key Theme #3: Rise of AI Agents**

- The discussion reportedly moved beyond chatbots toward **autonomous AI agents**.
- These agents could eventually execute complete workflows across personal and enterprise use cases.
- The future described is one where AI performs end-to-end tasks rather than simply answering questions.

**Key Theme #4: Future-Proofing Careers**

- Career resilience comes from maintaining a strong **Curiosity Quotient (CQ)**.
- Foundational knowledge remains important even as automation advances.
- The core message was that AI is unlikely to replace humans broadly; rather, people who use AI effectively will gain advantage.

**Memorable Takeaways**

- "We are at the iPhone 1 moment of AI."
- Cybersecurity must become a boardroom priority.
- AI agents will be more transformational than today's copilots and chatbots.

Curiosity and adaptability are critical leadership skills for the AI era.



Fireside Chat was followed by Q & A from the audience which saw active participation which reflected the relevance of the topic and also the involvement of the audience in the conversation.

Subra and Kalil were honored with Shawls and momentos. Event ended with Th.Ramesh (Vice President) delivering vote of thanks.

This was followed up with usual CIT fellowship and dinner.

Th. Subramanian, Past-President was instrumental in facilitating smoother conduct of the event at the Presidency Club and ensured the smooth running of the event. Participants registration were handled effectively by Th.Thaliravan. Tvl. Sakthivel. Mariappan, Sampath, Karnan Ragul helped in overseeing the arrangements.

Thanks toTh. Karnan for making the video, audio and YouTube Live streaming arrangements.

To sum up, it was an evening of networking, learning and strengthening the existing bonds, thanks to the wonderful platform laid by CITAACC.




# PUZZLES 2/26 WITH THEIR ANSWERS

1.In olden times. a villager had an old wall clock which stopped working as he forgot to wind. The only other wall clock in the village was at his sister's house. There was no other time-device in the whole village, such as watch, alarm clock, etc. (mobile phone in those days is out of question!). The villager's son wanted to set the clock to the correct time, by only making a trip to his auntie's house by walk. Unfortunately, the time needed to walk was also unknown. Assuming that his auntie's clock was working perfectly, how can he set his clock?

He should wind his clock and set it at 12:00 and start walking. When he reaches his auntie's house, her clock shows, say 3:00 p.m. Assume he spends half an hour there and leaves at 3:30. When he reaches his house back, say his clock shows 1:30. This means his walking up and down plus half an hour stay are together 1 hr 30 mins. This again means he has walked half an hour one way. He left his auntie's house at 3:30 and walked back half an hour. So it should be now 4.00 p.m. He can reset his clock to 4:00.

2.A businessman flies from Delhi to Chennai in an evening and checks into a room in a star hotel. He finishes dinner and lies in the bed but cannot sleep. He picks up the room phone, dials some digits and without speaking a single

word, keeps the receiver back and sleeps peacefully. What has happened?

The guest in the adjoining room was snoring profusely with loud noise due to which our man was unable to sleep. So from the hotel phone he dialled that room and woke him up from his sleep. Then he could sleep easily.

3.We have two rectangles with integral sides. The area of the first rectangle is three times that of the second, while the perimeter of the second is three times that of the first. Find the rectangles' dimensions.

First rectangle: 87 x 10Area: 870 Perimeter: 194 Second rectangle: 290 x 1Area: 290 (= 870/3) Perimeter: 582 (= 194 x 3)

Puzzles 3/26

You are walking along a road which divides into two branches. One branch leads to a sure death while the other leads to easy escape. No sign board, nothing. One person is standing in the start of each branch. Both know well which with branch leads to what. One of them always speaks truth while the other is a perfect liar. You do not know which branch leads to what. Also you do not know who is the truth-teller and who is the liar. You are permitted to ask only one question to only one of them. What will you ask to assure your survival?

A man is caught by a group of murderers and taken to their kingdom. The king says, "You are permitted to say one sentence. If that is true, you will be cut into pieces. If it is false, you will be roasted in the fire. The choice is yours". What sentence that clever man should say in order to escape using the opportunity?

**Solve:** (C + I + T) x (C x I x T) = CIT.Each alphabet represents a distinct digit and the RHS is a 3-digit number.


Secure Today
Grow tomorrow
One Stop Solutions for Your Life & Financial Goals
OUR SOLUTIONS
Life Insurance
Health Insurance
Mutual Funds & NPS
Fixed Deposits
Travel Insurance
Retirement Planning
Goal Based Planning
Tax Saving Solutions
Protecting Dreams. Building Futures.
WHY CHOOSE US?
Personalized Planning
Balanced Growth
Long-Term Security
Expert Guidance
Your Dreams. Our Commitment.
Anand Kumar (ARN-354816)
Registered Mutual Fund Distributor /
Executive Life Planner TATA AIA
Trusted Advice
Client First Approach
Long Term Relationship
Assetplus
TATA AIA
TATA AIG
TATA CAPITAL
care HEALTH
HDFC ERGO
+91 85084 81835
anandtokyo@gmail.com


VEDIC HOMES
PRESENTS
YOUR LAND.
OUR EXPERTISE.
SHARED SUCCESS.
Partner with Vedic Homes for premium residential development in Chennai. Whether you're a landowner looking for a Joint Venture or an individual seeking a reliable Turnkey Project Construction partner, we provide complete end-to-end solutions—from architectural design and statutory approvals to quality construction and timely delivery.
ZERO INVESTMENT FROM LANDOWNER
PREMIUM APARTMENT DEVELOPMENT
TRANSPARENT & PROFITABLE PARTNERSHIP
WHY PARTNER WITH VEDIC HOMES?
OWNERSHIP OF PREMIUM APARTMENTS
NO CONSTRUCTION BURDEN
TRUSTED DEVELOPER
TURNKEY PROJECT CONSTRUCTION
We take care of everything, end-to-end
ARCHITECTURAL DESIGN
CONSTRUCTION EXECUTION
QUALITY ASSURANCE
TIMELY DELIVERY
12+ SUCCESSFULLY DELIVERED PROJECTS ACROSS CHENNAI
98401 61522
www.vedichomes.co.in
info.vedichomes@gmail.com
LET'S BUILD VALUE TOGETHER.





தமிழ் திரை வரலாற்றுக்கென ஒரு சிறப்பு உண்டு. "Spot light" எனப்படும் முழு கவனமும் நாயகன், நாயகியை சுற்றியே வலம் வரும். கதையும், காட்சி அமைப்பும் இவர்களுக்கு பலம் சேர்ப்பதாகவே அமையும். இருந்தாலும், அன்றைய காலங்களில் கதையின் போக்கு அனைத்து கதாபாத்திரங்களை பின்னி பிணைந்து கோர்க்கப்பட்டிருக்கும்.

அக்கால திரை ஓவியங்களில், நாயகன் நாயகியை தவிர்த்து, குணச்சித்திர, நகைச்சுவை வேடமேற்று நடிக்கு அனைவரும், தங்களால் ஆன முழுப் பங்கினை அளிப்பது உண்டு.

பல சந்தர்ப்பங்களில், கதாநாயகன் கதாநாயகி, ஆகியோர் சற்றே அசந்தாலும் சுற்றி உள்ள மற்ற நடிகர்கள் எளிதாக, சிறந்த நடிப்பை வழங்கி, கவனத்தை ஈர்த்து விடுவர். நடிகர் திலகம் ஒரு முறை பேட்டியின் பொது, சில குணச்சித்திர நடிகர்களை குறிப்பிட்டு, படப்பிடிப்பின்போது, 'சற்று கவன குறைவாக இருந்தாலும், எளிதில், அவர்கள் நடிப்பில், முன்னணியில் வந்து விடுவர் ' என கூறியிருந்தார். அப்படிப்பட்ட இரு புகழ் பெற்ற குணச்சித்திர கலைஞர்களை இந்த இதழில் பார்க்க போகிறோம்.

நடிப்புலக சக்ரவர்த்தி எஸ்.வி.ரங்கா ராவ்



இக்கட்டுரையின் ஆசிரியர்களில் ஒருவரான சுந்தரத்திற்கு தமது பால்ய வயதினிலே, நடிகர் திலகம் நடித்த 'இராஜா' திரைப்படத்தின் முதல் காட்சியினை பார்க்கும் போது அந்நாட்களில் தங்கள் மனதில் ஒவ்வொவொரு ரசிகரும், இன்னின்னாருக்கு இந்த வேடம்தான் சரி என்ற ஒரு பிம்பம் இருக்கும் நிலையில், அவ்வழக்கத்தை மீறி, SV ரங்கா ராவ், வில்லனாக வேடத்தில், இளம் பெண்ணுடைய நடன அசைவுகளில் கிறங்கி போய், நடித்த காட்சியும், அமைப்பும், சுத்தமாக பிடிக்கவில்லை. இது ஒரு ரசிகனின் பார்வை, அவ்வளவே ; எனினும் , அளித்த கதாபாத்திரத்தில், சிறப்புற நடித்து, நிறைவு செய்திருந்தார் ரங்கா ராவ். இதுவே அவரது, பண்பட்ட நடிப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

நடிப்பை நடிப்பாகப் பாராது, கலைஞர்களை உளமார நேசித்து ஆசையோடு எதிர்பார்த்து, உரிமையோடு மனதிற்குள்ளும் மற்றவர்களோடும் சண்டையிட்டபடி ரசித்த காலம் அது. எஸ்.வி.சுப்பையா, எஸ்.வி. சஹஸ்ரநாமம், எஸ்.வி ராமதாஸ், எஸ்.வி.ரங்காராவ் என்று ஏதோ 'நர்சரி ரைம்' சொல்வதுபோல் அக்காவோடும் அண்ணனோடும் நெருங்கிய உறவினர்களோடும் பித்துப் பிடித்த மாதிரி சொல்லிச் சொல்லி, சினிமாவே வாழ்க்கை என்பது மாதிரி இருந்த பருவம் அது. கதாநாயகர்களைக் கடந்து, கதையோட்டத்தில் முக்கிய இடம்பெறும் கதாபாத்திரங்களில் நடிப்போரையும் கூர்ந்து கவனித்து அவர்களைப் போலவே வீட்டில் நடித்துக் காட்டி உற்சாகத் துள்ளல் போட்ட நாட்கள். எஸ்.வி.ரங்காராவும் பால்யத்தில் ஆக்ரமித்திருந்தார். அதனால்தான் அப்படி 'கச்சாமுச்சா' வேடங்களில் அவர் நடிக்கலாமா என்று தனிப்பட்ட கோபம் வந்தது.

### கவனத்தைக் குவிக்கும் நடிப்பு

அசத்தும் உயரம், கம்பீர தோற்றம், அகலமான தெளிவான முகம், உணர்ச்சிப்பிழம்பாகும் கண்கள், சுத்தமான உச்சரிப்பு, இவற்றின் ஒட்டுமொத்த கலவைதான் ரங்கா ராவ்.

வழக்கமாக தந்தை, உறவினர், பெரியவர் போன்ற கதாபாத்திரங்களில் நடிப்போர் இந்த வெளிப்பாடு போதும் என நினைத்ததில்லை அக்காலத்தில். திரைக்கதை, வசனம், இயக்குனரின் கட்டளைகள் ஆகிவற்றை எல்லாம் மீறி, ஒரு நடிகனால் பரிமளிக்க முடியும்யென்றால், அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ரங்கா ராவ் ஆவார். 'சர்வர் சுந்தரம்' திரைப்படத்தில், நாகேஷ் முதன்முறை ஸ்டுடியோவுக்குள் நுழைந்து நடிக்கும் காட்சியில் இயக்குநராக ரங்கா ராவ். நாகேஷ் மனோரமா இருவரது அட்டகாச நடிப்பில் பின்னி எடுக்கும் திரைக்கதையில் தமக்கான கதாபாத்திரத்தை வழங்கும் விதத்தில் உச்சம் தொட்டிருப்பார் ரங்கா ராவ்..





நவரசம் என்ற வசனத்தை மனோரமா நாராசமாக ஒலிக்கும்போது, தலையில் அடித்துக்கொண்டு, "அம்மா...அது நாராசம் இல்லம்மா, நவரசம்...இது தமிழ்ப் படம்மா...மத்த படத்துல எப்படி வேணா பேசு...என் படத்துல தமிழ் பேசும்மா.." என்று கெஞ்சுவார்.

அலுத்து களைத்து இருக்கும் ரெங்க ராவ் இடம், நாகேஷ் "தனியாக நான் எதற்கு ஒரு நகைச்சுவை கதாபாத்திரம், இந்த அம்மா தமிழ் பேசினாலே போதுமே" என்பார்;

இதை ரசிக்கவும் மாட்டாமல், சகிக்கவும் கூடாமல் ரங்கா ராவ் சலிப்பு எனும் உணர்ச்சியை வெளிப்படுத்தும் இடம், ஒன்று போதும், ஒரு கலைத்திறன் மிக்க நடிகனால் எந்த அளவிற்கு ஒரு காட்சி மிளிரும் என்பதற்கான எடுத்து காட்டு.

அதே போல், செல்லமாக வளர்க்கப்பட்ட, சுதந்திரமாக செயல்படும் பெண்ணாக சரோஜாதேவியும், மகளின் விருப்பத்திற்கு மாற்றாக இம்மிகூட, மாறாத தகப்பனாக ரெங்கராவ், "எங்க வீட்டு பிள்ளை" திரைப்படத்தில், நடிப்பில் பிரமாதப்படுத்தியிருப்பார்.

மகள் பேச்சு கேட்கும் எல்லா தகப்பன்மார்களும் அப்போது, தங்களை திரையில் கண்டிருப்பார்கள். இது, ஒரு கதாபாத்திரத்திற்கு, ஒரு நடிகனால், ஒரு கதாசிரியரால், அளிக்கப்படும் நீதி .(justification).

# திரையுலகின் கடோத்கஜன்



‘சபாஷ் மீனா’வின் முழு நீள அபார நகைச்சுவை வெளிப்பாடுகளில் சரோஜாதேவியின் தந்தையாக ரங்கா ராவ் தோன்றும் இடங்கள் வெடிச்சிரிப்பில் சிதறும். தங்கள் கல்லூரியில் நடத்த இருக்கும் நாடகம் பற்றி சரோஜா தேவி அவரிடம் விவரித்துக்கொண்டிருக்கும்போது சந்திரபாபு நுழைவார். சிவாஜி கணேசனுக்கு மாற்றாக அவர் அங்கே வந்திருப்பவர். “உனக்கென்னப்பா வேஷம்?” என்று சகஜமாக ரங்கா ராவ் அவரைக் கேட்கும் இடம், அத்தனை இயல்பாக இருக்கும்.

திரையுலகின் கடோத்கஜனுக்கு அந்த வேடமே கிடைத்துவிட்டபின், வேறென்ன சொல்ல? ‘மாயா பஜார்’ படமே அவரது அராஜக அட்டகாசங்களாலும், சாவித்திரியின் மிரட்டலான நடிப்பாலும், ஜெமினி கணேசனின் மென்மையான நடிப்பினாலும் புகழ்பெற்றது.

என்றாலும், ‘கல்யாண சமையல் சாதம்’ என்று திருச்சி லோகநாதன் எடுத்துக் கலக்கும் அற்புத பாடலுக்கு அவரைக் காட்டிலும் வேறு யார் கடோத்கஜன் என்று நாம் கண்டிராத கதாபாத்திரம் ஒன்றை நடிப்பின் மூலம் நம்ப வைத்திருக்கமுடியும்!

ஏற்கெனவே விரிந்த தாமரைக் கண்களை இன்னும் அகலமாக விரித்து ‘அங்கார பஜ்ஜி அங்கே... சுங்கார சொஜ்ஜி இங்கே...!’ என்று ஒவ்வொரு பலகாரமாக உருட்டி உருட்டிப் பார்த்தபடியும், திரட்டித் திரட்டி விழுங்கியபடியும், மீசையை மறவாமல் ஒதுக்கி சரி செய்தபடியும், ஆகாரத்தை நின்று நிதானித்து உள்ளே தள்ளி ஒரு புன்னகை சிந்தி உணவை ரசித்தபடி, சமையலறையில் அவர் நிகழ்த்தும் ரகளையை எந்த வயதினரும் குழந்தை போல விழுந்து விழுந்து சிரித்து ரசித்துள்ளனர்.




முத்தாய்ப்பாக, தான் தன்னுடலை உணவு உண்பதற்காகப் பெரிதாக்கிக்கொண்டுவிட மெலிந்து சிரித்துத் தோன்றும் தனது கதாயுதத்தைப் பரிதாபமாகப் பார்த்துச் சிரிக்குமிடம். புராணக் கதாபாத்திரங்களுக்கு, தந்தை முத்திரை நடிப்புக்கு அவரே இணை. 69 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இப்படத்தின், சமையலறை காட்சியினை போன்று, இன்று வரை எடுக்கப்படாததே ஒரு சாதனை எனலாம்.

நடிப்புலகின் மூத்த அண்ணன்

'அன்புச் சகோதரர்கள்' படத்தில் பாசமிக்க அண்ணனாகத் தோன்றும் ராவ், தமது வாழ்க்கைக் கதையை கண்டசாலா குரலில் 'முத்துக்கு முத்தாக' எனும் திரைப்பாடல் வழி கடத்தும் பாங்கு அபாரமானது. அவரது பாணியைக் கொண்டாடிப் பேச இன்னும் எத்தனை படங்கள்.

அத்தனையும் உணர்ச்சி குவியல்கள். 'படிக்காத மேதை' படத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் தனித்துவமான குரலில் ஒலிக்கும் மகாகவியின் அற்புதமான 'கண்ணன் என் சேவகன்' எனும் கவிதையின் இசை மொழிக்கு, தனது ரங்கனை கண்ணனாகக் காணும், எஸ்.வி.ரங்கா ராவின் நடிப்பு, காண்பது திரைப்படமல்ல , நமக்கு தெரிந்த ஒரு குடும்பத்தின் கண்ணீர் கதைதான் என, படம் பார்க்கும் ரசிகர் அனைவரையும், அக்காட்சியில், கதறி அழ வைத்திவிடும் மிக



சிறந்த நடிப்பு. இதில், ஒரே காட்சியில், நடிகர் திலகத்திற்கும், SVR க்கும் ஆரோக்கியமான நடிப்பு போட்டியும் உண்டு. . 'நம் நாடு' படத்தில் வில்லன் வேடத்திலும் ஒரு தனித்துவ முத்திரை பதித்திருப்பார். எத்தனையோ கதாபாத்திரங்கள், எத்தனையோ காட்சியமைப்பு, பல்வேறு உச்ச நட்சத்திரங்கள், பல கதாசிரியர்கள், பற்பல இயக்குனர்கள், முன்னணி தயாரிப்பாளர்கள், இத்துணை மறுபாடுகளுக்கிடையேயும், தம் தனித்தன்மை மாறாமல், சிறந்த பங்களிப்பை, என்றென்றும், வஞ்சனையின்றி வழங்கிய SVR, வையத்துள் வாழ்ந்தவரில்; வாழ்வாங்கு வாழ்ந்தவர். நீடித்து நிலைத்திருக்கட்டும் அவர்தம் புகழ்.!!



நவரசத் திலகம்

# டி.எஸ்.பாலையா



திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சுண்டங்கோட்டை எனும் ஊரில் 1914 ஆகஸ்ட் 23ம் தேதி பிறந்த டி.எஸ்.பாலையா. சிறுவயதில் சக மாணவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார். படிப்பும் கசக்கவே, எப்பாடுபட்டாவது அனைவரும் புகழும் வண்ணம் வாழ்க்கையில் உயர வேண்டும் என்று அந்த சிறு வயதிலேயே ஏங்கினார். அவரது ஊருக்கு வந்திருந்த சர்க்கஸுக்குச் சென்றவர்,

சர்க்கஸ் கலைஞர்களின் ஒவ்வொரு சாகஸம் முடிந்த பின்னர் ரசிகர்களின் பலத்த கரகோஷத்தையும், கைதட்டல் ஒலியையும் கேட்டார். இது ஒரு பெருந் தாக்கத்தை உண்டாக்கவே, உடன் சிறிதளவு பணத்துடன் நண்பருடன் கிளம்பிச்சென்றார்.

கூடவந்த நண்பர் பணத்துடன் கம்பிநீட்டி விடவே, ஏமாற்றத்துடன், வயிற்று பிழைப்பிற்க்காக, கிடைத்த வேலைகளைப்பார்க்க தொடங்கினார்.

சர்க்கஸில் சேர முடியாவிட்டாலும் பரவாயில்லை புகழ் தரக் கூடிய ஏதாவது ஒரு துறையில் பிரகாசிக்க முடிவு செய்து அது தான் தினமும் செல்லும் நாடக உலகில்தான் உள்ளது என்று நினைத்து நாடகத்தில் சேர முடிவெடுத்தார். குறுகிய காலம் பாய்ஸ் கம்பெனியிலிருந்துவிட்டு பால மோகன சபாவில் சேர்ந்தார். அங்கு அவரது வாத்தியாரான கந்தசாமி முதலியாரின் வழிகாட்டுதலில் சுட்ட தங்கமாய் மிளரத்தொடங்கினார்.

'சதி லீலாவதி' படத்தில் கந்தசாமி முதலியார்தான் தனக்கு மிகவும் பிடித்த மாணவனான பாலையாவுக்கு ஒரு நல்வாய்ப்பைப் பெற்றுத் தந்தார். எல்லீஸ்.ஆர்.டங்கன் இயக்கிய அப்படத்தில் முதன் முதலாக வெள்ளித் திரையில் வில்லனாக அறிமுகமானார் பாலையா. சதி லீலாவதி அவரது திரை வாழ்க்கையில் ஆச்சரியமான தொடக்கம். காரணம் எம் ஜி ஆர் எம் கே ராதா கே.ஏ.தங்கவேலு என அனைவருக்கும் அதுவே முதல் படம்.

அதன் பின் இயக்குநர்கள் விரும்பும் நடிகராகிவிட்டார். இளம் வயதில் பற்பல துன்பங்களை அனுபவித்தவர், பிற்காலத்தில், சுகபோகங்களில் மிதக்க துவங்கினார். இவருக்கு, மூன்று மனைவிகள், ஏழு குழந்தைகள். ஒரு கட்டத்தில் வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு சாமியார் ஆனார்.

பாண்டிச்சேரிக்கு அருகே ஒரு ஊரில் தலைமறைவாகிவிட்டார். புதுச்சேரிக்கு பணிநிமித்தமாக சென்ற மாடர்ன் பட நிறுவன முதலாளி திரு. சுந்தரம் அவர்கள், அங்கு பாலையாவை கண்டு, உடனே, தன்னுடன் அழைத்துவந்து விட்டார். பர்மா ராணி என்ற படத்தில் அவரை நடிக்க வைக்க, அவரது இரண்டாம் அத்தியாயம் தொடங்கியது. பாலையா வில்லனாக மட்டுமல்ல சில படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். அதுவும் நாட்டிய பேரொளி எனப் பின்னர்



பட்டம் பெற்ற பத்மினியின் திரை வாழ்வில் ஆரம்பக் காலத்தில் அவருக்கு கதாநாயகனாகவும் நடித்துள்ளார். சொந்தக் குரலில் பாடும் திறமையுடைவர். வில்லன், கதாநாயகன், நகைச்சுவை நடிகர், குணசித்திரக் கதாபாத்திரம், பல குரலில் பேசும் திறன், பாடும் திறனுடையவர் மதுரை வீரன், அம்பிகாபதி, வேலைக்காரி, ஓர் இரவு, கணத்தூர் கண்ணம்மா போன்ற காலத்தால் அழியாத படங்களில் திறம்பட நடித்தவர் .

அவரை சதிலீலாவதியில் அறிமுகப்படுத்திய டங்கன் ‘‘பாலையாவை மிஞ்ச ஒருவராலும் முடியாது ('No one can replace Balaiya') என்று கூறி அவரைப் பெருமைப்படுத்தினார்.

அவரது பெருமைக்கு மற்றொரு சான்று 'மணமகள்' எனும் படத்தில் பாலையாவின் அற்புதமான நடிப்பாற்றலைப் பாராட்டி, தனது விலை உயர்ந்த காரை அவருக்குப் பரிசளித்துள்ளார் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

பாலையா எளிதில் உணர்ச்சிவசப்படும் தன்மையுடைவராக இருந்தார்.. சென்னையில் வசிக்கும் போது ஆவேசம் வரும்போதெல்லாம் ‘அந்த துப்பாக்கியை எட்றா’ என்று கோபாவேசமாகச் சொல்வாராம்.

பாலையாவின் பலம் அவரது வசன உச்சரிப்பும், முக பாவமும், உடல்மொழியும் எனலாம். அவரது முக பாவத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டு, ஹேமநாத பாகவதாராக சிவாஜியுடன் ஏட்டிக்குப் போட்டி போட்டு அவர் பாடும் ‘ஒரு நாள் போதுமா இன்றொரு நாள் போதுமா என்ற பாடலே அத்தாட்சி.

பாலையாவின் முக்கிய படங்களுள் ஒன்று அவர் நாகேஷுக்கு தந்தையாக நடித்த காதலிக்க நேரமில்லை படத்தில் நடித்தது.

அது யாரும் மறக்க முடியாத ஒரு திரைப் பாத்திரம். நாகேஷ் ஒரு பேய்ப் படக் கதையை விலாவரியாக விவரிக்க அதற்கு பாலையா தரும் ரியாக்ஷன் உலகத் தரமான அசல் நடிப்பு. மிக சிறந்த நகைச்சுவை நடிப்பை நாகேஷ் வழங்கிக்கொண்டிருக்க, அதற்கு, ஈடு கொடுத்து, மிக சிறப்பாக வலு சேர்த்தவர் பாலையா .

இன்றளவும் மிக சிறந்த நகைச்சுவை காட்சியாக திகழ்கிறது. ‘திருவிளையாடல்’, ‘ஊட்டி வரை உறவு’,







தில்லானா மோகனாம்பாள்' போன்ற படங்கள் அவரது பங்களிப்பால் ஒருபடி அதிகம் பேசப்பட்டன. அதிலும்வசனம் மிக குறைவாக இருந்த ரயில் காட்சியில் , அவரது நகைச்சுவை நடிப்பு, சிறந்த பாராட்டினை பெற்றது.

அப்படத்தில், இளம் காதல் ஜோடியான, சிவாஜி, பத்மினி இருவருக்கும், நெருக்கம் உண்டாக உதவும் விதமாக, கதாநாயகியின் தயாரான சரஸ்வதியை, பிரித்து வேறு இடத்தில் உட்கார வைக்க பாலையா போடும் திட்டமும், நடிப்பும், திரையரங்குகளில், கரவொலி அதிரும். . அந்த நகைச்சுவை காட்சியை இன்றளவும் யாராலும் மறக்க முடியாது.

கே.பாலசந்தரின் இயக்கத்தில் வெளியான 'பாமா விஜயத்தில்' பாசக்கார பேரன் பேத்திகளுடன் சேர்ந்து, 'வரவு எட்டணா செலவு பத்தணா' என்று மருமகள்களுக்கும் மகன்களுக்கும் அறிவுரைக் கூறிய அன்புத் தந்தை பாலையாவை நினைவு வைத்திருப்பவர்கள் அனேக ரசிகர்கள். 1972 ஆம் ஆண்டு, தமது 60 ஆவது வயதில், மறைந்தார். திறமை இருந்தால், எந்த வேடத்திலும் ஜொலிக்கலாம் என்பதற்கு, இவரே சிறந்த எடுத்து காட்டு.

வாழ்க அவர்தம் புகழ் !!!

**மீண்டும் ஒரு சாதனையாளருடன் அடுத்த இதழில் சிந்திப்போம்.**


CORPORATE
PLANNING SERVICES
Exclusive Coaching for Board of Directors
CLARIFY VISION
SHAPE STRATEGY
STRENGTHEN GOVERNANCE
DRIVE EXECUTION
DELIVER SUSTAINABLE GROWTH
5-YEAR GROWTH ROADMAP
Enabling leadership teams to design and execute a 5-Year Growth Roadmap
CLARITY • STRATEGY • EXECUTION • RESULTS
GNS
G N SIVARAMAKRISHNA
STRATEGIST • COACH • GROWTH ARCHITECT
GNS Consultant
gns@gnsconsultant.com
www.gnsconsultant.com
+91 98840 75963
VISION • STRATEGY • EXECUTION • MEASURABLE OUTCOMES

# கண்டேன் கனடா - வை



முனைவர்.B.பாண்டிராஜன்
1983 - இயந்திரவியல்

கனடா பயணம் தொடர்கிறது...

நகராட்சி நீர் அழுத்தம் மிகவும் சக்தி வாய்ந்தது. இதனால், வீட்டின் இரண்டு அல்லது மூன்றாவது மாடிகளுக்குத் தண்ணீரை ஏற்றிச் செல்ல தனியாக வீட்டுப் பம்புகளோ அல்லது மொட்டை மாடித் தொட்டிகளோ தேவையே இல்லை. குழாயைத் திறந்தாலே தண்ணீர் அதிவேகமாக வரும்.



வான்கூவரில் குளிர்காலத்தில் வெப்பநிலை பூஜ்ஜியத்திற்கு அருகில் செல்லும். மொட்டை மாடியிலோ அல்லது வெளிப்புறத்திலோ தண்ணீர் தொட்டிகளை வைத்தால், அதில் உள்ள தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகிவிடும்; குழாய்களும் வெடித்துவிடும்.

எனவே, பாதுகாப்புக் கருதி வீடுகளுக்கு வெளியே தண்ணீர் தேக்கி வைக்கப்படுவதில்லை அடுக்குமாடி குடியிருப்புகளின் அடித்தளத்தில் (Basement Mechanical Room) சக்திவாய்ந்த பூஸ்டர் பம்புகள் பொருத்தப்பட்டிருக்கும். இவை நகராட்சித் தண்ணீரின் அழுத்தத்தை மேலும் அதிகரித்து, கட்டிடத்தின் மிக உயரமான தளங்களுக்கும் சீரான அழுத்தத்துடன் தண்ணீரை மேல்நோக்கித் தள்ளும்.

பெரிய தொட்டிகளுக்குப் பதிலாக, அழுத்தப்பட்ட காற்று மற்றும் தண்ணீரைக் கொண்ட சிறிய பிரஷர் டேங்க்கள் அடித்தளத்தில் பயன்படுத்தப்படும்.

பம்புகள் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்காமல், குழாய்களில் அழுத்தத்தை நிலையாக வைத்திருக்க இவை உதவுகின்றன.

குளிர்ந்த நீரைச் சேமிக்க இங்கு தொட்டிகள் இல்லை என்றாலும், சுடுதண்ணீரைச் சேமிக்க மட்டும் ஒவ்வொரு வீட்டின் உள்ளேயும் (Utility Room அல்ல Basement-ல்) ஒரு தொட்டி இருக்கும்.



இது பொதுவாக 150 முதல் 250 லிட்டர் கொள்ளளவு கொண்ட, வெப்பம் வெளியேறாதவாறு நன்கு இன்சுலேட் செய்யப்பட்ட (Insulated Thermally) ஒரு உலோகத் தொட்டியாகும். நகராட்சியிலிருந்து வரும் நேரடித் தண்ணீர் இந்தத் தொட்டிக்குள் நுழையும். தொட்டியின் உள்ளே இருக்கும் எலக்ட்ரிக் காயில் அல்லது கேஸ் பர்னர் தண்ணீரை எப்போதும் 40°C - 50°C வெப்பநிலையில் சூடாக வைத்திருக்கும். நாம் குளிக்கும்போதும் பாத்திரம் கழுவும்போதும் இதிலிருந்துதான் சுடுதண்ணீர் விநியோகிக்கப்படும்.

நகராட்சியின் பிரதானக் குழாயில் வரும் தூய்மையான தண்ணீருக்குள், வீடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட அசுத்த நீர் தவறியும் பின்னோக்கிச் சென்று கலந்துவிடக் கூடாது என்பதற்காக, ஒவ்வொரு வீட்டின் பிரதான நீர் இணைப்பிலும் 'பேக்ஃப்ளோ ப்ரிவென்டர்' (Backflow Preventer Valve) எனப்படும் ஒருவழி உந்து வால்வு கட்டாயமாகப் பொருத்தப்பட்டிருக்கும்.

வான்கூவரில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள் ஸ்டான்லி பூங்கா டவுன்டவுன் (Downtown) (கப்பலில் இருந்து இறங்யவுடன் பார்க்கும் நகரம்), பகுதிக்கு மிக அருகில் அமைந்துள்ள 405 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஒரு பிரம்மாண்டமான இயற்கை பூங்கா. இதைச் சுற்றியுள்ள 'சீவால்' (Seawall) பாதையில் மக்கள் நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுவதை மிகவும் விரும்புவர். கிரான்வில் தீவு (Granville Island): கலைக்கூடங்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் சுவையான உணவுகள் நிறைந்த ஒரு புகழ்பெற்ற பொதுச் சந்தை (Public Market) பகுதி.

கேஸ்டவுன் (Gastown): வான்கூவரின் பழமையான வரலாற்றுப் பகுதி. இங்குள்ள பழங்காலத்துக் கட்டிடங்கள், கற்கள் பதிக்கப்பட்ட தெருக்கள் மற்றும் புகழ்பெற்ற நீராவி கடிகாரம் (Steam Clock) ஆகியவை முக்கியமானவை.



வான்கூவர் தீவின் (Vancouver Island) தெற்கு முனையில் அமைந்துள்ள விக்டோரியா (Victoria), பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் தலைநகரம் (Capital City) ஆகும். வான்கூவர் ஒரு பெரிய வணிக மையமாக இருக்கும்போது, விக்டோரியா அதன் அமைதியான சூழல், பழங்கால ஐரோப்பியக் கட்டிடக்கலை மற்றும் வரலாற்றுச் சிறப்புகளுக்காக அறியப்படுகிறது. நாடாளுமன்றக் கட்டிடங்கள் (BC Parliament Buildings) இன்னர் ஹார்பர் (Inner Harbour) பகுதியில் அமைந்துள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்கள், விக்டோரியன் பாணி கட்டிடக்கலைக்குச் சான்றாகும். இரவு நேரத்தில் ஆயிரக்கணக்கான விளக்குகளால் இது அலங்கரிக்கப்படும் போது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இங்கு செல்ல 'பிசி ஃபெர்ரிஸ்' (BC Ferries) எனப்படும் பிரம்மாண்ட படகு போக்குவரத்து அல்லது கடல் விமானங்களை (Seaplanes) பயன்படுத்த வேண்டும்.

வான்கூவரில் இருந்து விக்டோரியா தீவிற்கு நேரடியாகப் பாலம் எதுவும் கிடையாது. எனவே, வாகனங்கள் மற்றும் மனிதர்களை ஏற்றிச் செல்லும் பிரம்மாண்டமான ஃபெர்ரி கப்பல்கள் மூலமே செல்ல வேண்டும்.

இது ஒரு நல்ல அனுபவம். வான்கூவரில் இன்னும் பல இடங்கள் உள்ளன.

பயணங்கள் தொடரும்...


THE DIVINE FOODS
Divine ABC Mix!
Loved by 3,00,000+ Families
Scan here for more details
100% NATURAL
NO ADDED SUGAR
NO ARTIFICIAL FLAVOURS
SOURCED FROM FARMERS
₹269 Only
DIVINE FOODS
Apple • Beetroot • Carrot
ABC
Mix
For Detox
(With the Goodness of Beetroot, Amaranthus and Palm Sugar)
100% Natural Drink
(With No Added Refined Sugar)
Net wt. 125g
Featured on:
the better india
JOSH TALKS
YOURSTORY
Brut.
StartupTN
www.thedivinefoods.com
+91 7010563078
@thedivinefoods
THE DIVINE FOODS
fssai
Lic. No.12424018001191

# SUBSIDIES - AN OVERVIEW






K.Periyasamy
1982-Chemical

**Introduction**

Subsidies are given throughout the world in some form or the other. It has different names like, subsidies, freebies, incentives, perks, bonuses, compensations, reimbursements, allowances, rebates, concessions, food stamps, tokens, etc.

Subsidies or freebies per se are not bad words. But some people hate the word subsidies, and they tend to treat the recipients at a low level. However, the attitude is not be taken adversely because they would have been born and brought up in such an environment where they would never have come across people who struggle every day to make ends meet.

Some opine that teaching a person how to catch fish is right rather than giving fish itself. But that is not correct when the person is already hungry…! Also, no one is against teaching that person how to fish. Both are required. In fact, if we dive deep into the details, as we will see below, there are several hidden benefits to the middle class and the upper class which are not considered as subsidies in the conventional analysis.

**Types of Subsidies**

Subsidies can be broadly classified into two types.

1) Consumption (or Usage) based.

2) Production-based.

Typical examples of consumption-based subsidies are Food subsidies, Passenger Transport subsidies, Domestic electricity subsidies, Leave Travel concessions, Subsidised Canteen tokens, Free TV / Mixy, etc.

Fertilizer, Agri power subsidies, Freight Transport subsidies, etc even though they seem to be consumption-based, they are not. They are intended for increasing/assisting production. Hence, these come under production-based subsidies.

Typical examples of production-based subsidies are Free power for

farmers, Subsidised fertilizers, Free / Reduced Electricity tariff for certain industries, Capital / Working capital subsidies for industries, production-linked incentive schemes, production-linked bonuses, etc.

Subsidies can also be classified under two other Categories:

A) Direct Subsidies.

B) Indirect (or Implicit) subsidies.

Free power, Free bus travel, Fertilizer subsidies, Food product subsidies, etc are Direct subsidies.

Electricity / Water supply tariffs lower than the production cost, Bus fares below the cost per KM, concessions offered to government employees like LTC, lower Housing loan interest, free common facilities offered in housing colonies, Medical Bill reimbursements, etc are Indirect subsidies.

Another important Indirect subsidy which goes unnoticed is the lower market prices of agricultural products enjoyed by urban people due to:

a) Subdued prices prevailing in the open market to the extent of subsidised items sold in PDS.

b) Knee-jerk interventions like overnight export restrictions, dumping of buffer stocks when agricultural product prices rise marginally, but keeping quiet when the prices crash, imposing restrictions on stock, etc.

c) Deliberately keeping the weightage for food products high in the Price indices. This causes a substantial rise in the price index even for small price increase in Agri commodities. Once the Price Index rises, the Government intervenes and pushes the prices of Agri products down by hook or crook.

For example, about 52 Mn tons of Rice and 18 Mn tons of Wheat are sold in the PDS at throwaway prices, in fact free of cost, in many States. If this is not done, there will be an increase in demand in the open market and proportionately there will be increase in prices.

Hence, the people who buy under ration supply are benefited by Direct subsidy, and the others are enjoying this Indirect subsidy.

Yet another example of indirect subsidy is the dead cheap fares enjoyed by urban people in Suburban trains, resulting in about ₹10,000 crores loss to the Railways every year. In the same way, the huge loss in the Metro trains is an indirect subsidy enjoyed by a few crore city folks for their comfortable journey.

Agriculture-based Subsidies- Who are the real beneficiaries?

We all tend to think that the free power for agriculture, fertilizer subsidy, interest subvention on farm loans, etc are meant only for farmers. This is NOT factual.

Only part of these subsidies, to the extent of food products consumed by

the farmers and the farm workers, really go to the farming community or grossly to the rural people. The rest goes to the urban consumers!

To elaborate further, the Minimum Support Price (MSP) is calculated taking into account all these subsidies. Hence, the MSP is lower to that extent. The Market price, which is more or less linked to the MSP, also comes down to that extent. Hence, the urban consumers pay less to that extent.

The per capita consumption of food products (rice, wheat, milk, meat, fruits, vegetables, spices, etc) is much higher in urban areas. A lot of Rural people consume millets, and they also consume very little milk, fruits, etc.

Hence, even though the urban population is about 40%, the effective agriculture subsidy component enjoyed by urban people is at least 60%.

That means, practically 60% of agriculture subsidies are going to the urban people. How many of us are aware of this fact?

In effect, the proportion of Direct and Indirect subsidies enjoyed by urban people are much higher compared to rural people..!

In the name of helping the poor, the farming community is being looted indirectly.

**Policy Guidelines for Subsidies**

In general, as a good economic policy, production-based subsidies are welcome. Whereas, consumption-based subsidies shall be restricted to the bare minimum and shall be given only for the bottom strata of society, typically the bottom one third. The subsidy component shall be fully compensated from the Budgetary allocation to the organisation that makes the supply or service.

For the remaining, consumption-based subsidies in any form shall be discouraged. All products and services shall be sold at cost + profit basis. That profit is a must, whatever may be the product/service. Only then, the products/service capacity can be increased to meet the growing population needs and also to improve the quality.

If any sector, be it Government or Private, wants to reward its employees, it shall be purely production-linked or performance-linked. Blanket bonuses/incentives for all and sundries, have no meaning, which can very well be part of salary itself..

Consumption based subsidies are welcome, if it has got a public cause. For example, vaccines, specific nutrient supplements (like Iodised salt, Vitamin A enriched food products), tax exemption for good movies, etc benefit the society at large. Hence these are welcome.



care HEALTH INSURANCE
CARE Supreme Enhance
Affordable ₹1 Crore Health Cover with Aggregate Deductible
BEST CLAIM SETTLEMENT COMPANY OF THE YEAR*
₹1 CRORE
HEALTH PROTECTION
COMPLETE CARE. COMPLETE CONFIDENCE.
KEY HIGHLIGHTS
COMPREHENSIVE HOSPITALIZATION COVER
HASSLE-FREE CASHLESS TREATMENT
IDEAL FOR
AGGREGATE DEDUCTIBLE IN A POLICY YEAR
₹5 Lakh
₹7 Lakh
₹10 Lakh
₹15 Lakh
Organ Donor Cover
AYUSH Treatment Cover
Unlimited Automatic Recharge
For more details, contact:
Anand Kumar
+91 85084 81835




HI-TECH REALTY
Your Trusted Real Estate Partner in Chennai
Buy | Sell | Rent | Property Management | Advisory
Expert guidance for residential, commercial, and investment properties. We help buyers, sellers, landlords, NRIs, and investors with transparent, professional real estate solutions.
Property Sales
Property Rentals
Property Management
Real Estate Advisory
Professional. Transparent. Reliable.
Call / WhatsApp:
75502 64658
www.hitechrealty.in
care@hitechrealty.in
No.1, Dr. Thirumurthy Nagar Main Road, Nungambakkam, Chennai - 600034

# வாசகர் கருத்து





இளங்கோ.ம
1985 - இயந்திரவியல்

கடந்த இரு CITAACC e-Magazine இதழ்களில் வெளிவந்த MSV பற்றி திரு. KNK மற்றும் திரு.சதீஷ் ஆகியோர் எழுதியிருந்ததை படித்து மகிழ்ந்தேன்.

என் மகிழ்விற்கு காரணம், நான் இசை மேதை MSV-யின் தீவிர ரசிகன் ஆவேன். ஏழ்மை நிலையில் இருந்து, விடா முயற்சியுடன், படிப்படியாக முன்னேறி, ஒரு சிறந்த இசை அமைப்பாளராக மட்டுமின்றி, பல்லாயிர கணக்கான மக்களின் மன அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் அவர் காரணம் ஆனவர்.


இந்தியில் சங்கர்ஜெய்கிஷன் என்ற பெயரில் புகழ்பெற்ற இரட்டை இசையமைப்பார்கள் இருந்தது போல் தமிழில் விசுவநாதன்இராமமூர்த்தி என்ற இரட்டை இசையமைப்பாளராக பிரபலமாக இருந்தனர். ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் வரை 700 படங்களுக்கு இணைந்து இசையமைத்தார்கள். இவர் தனியாக 500 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். இளையராஜாவோடு சேர்ந்து, மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ்ப் பாட்டு, செந்தமிழ் செல்வன் என மூன்று படங்களுக்கு இசை அமைத்துள்ளார். முதலில் மெல்லிசை மன்னர் என்று அழைக்கப்பட்ட MSV அவர்கள் பிறகு திரை இசை சக்கரவர்த்தி (The emperor of cine music) என்று

அழைக்கப்பட்டார். 2012 ஆம் ஆண்டு அன்றைய State Govt இவரது இசைக்கு 60 gold coins மற்றும் car ஒன்று பரிசாக அளித்து பெருமை படுத்தியது.

இவரது சொந்த குரலில் 500 பாடல்களை இவர் இயக்கிய இசையுள்ளும் மற்றவர் இயக்கிய இசையில் 200 பாடல்களை இவரே பாடியுள்ளார்.

இவரது இசை பயணத்தை, அழகாக, சுவாரசியம் குறையாமல், எழுத்தோவியமாக வடித்த ஆசிரியர்கள் இருவருக்கும் எனது, மனமார்ந்த பாராட்டுகள்.

தொடர்ந்து அவர்கள், பல தமிழ் திரை படைப்பாளர்கள், திரைக்கலைஞர்கள் பற்றி சுவைபட எழுதவேண்டும் என்பது என்னை போன்றோரின் பேரவா.



credeko

*Save Power. Save Resources.*

# AIR-CONDITIONING EXPERTS

# VRV, DUCTED, CASSETTES, CHILLERS

- **Credible, Eco-friendly solutions**
- **Best-fit, right-spend products**
- **Top Quality Installation**
- **Best-in-Class After Sales Services**

Team with **Top Professionals** of **30+ years of experience**
**Wide Experience** in all segments - ***Residences, Offices, Showrooms***
***IT Hubs, Laboratories and Convention Halls.***

**DESIGN, VALUE-ENGINEERING, PROJECT MANAGEMENT**
**INSTALLATION & SERVICES**

## CREDEKO TECHSYS PVT. LTD.

**2/604, D-Sector, 6th Street, Annanagar West Extn.,**
**Chennai 600 101. TamilNadu. India**
**Mob : 99406 30658. 73972 33629**
**www.credeko.com Email : credekotechsys@gmail.com**

---

**APPLICATION-BASED CHOICE FROM TOP BRANDS**

BLUE STAR

Carrier

TOSHIBA
Leading Innovation

MITSUBISHI
ELECTRIC

#LeanOnUs

GERI CARE
ELDERCARE BY GERIATRICIANS

# When *Cancer* Meets Ageing, *Care* Must Go Beyond Cancer.

GERIATRIC ONCOLOGY CENTRE

## Introducing India's First 360° Geriatric Oncology Team

**Where every Cancer Care Plan is co-created by Oncologists and Geriatricians.**

For older adults, cancer care must look beyond the disease. Our oncologists and geriatricians co-create every care plan, supported by physiotherapists, psycho-oncologists, dietitians, palliative care specialists and caregiver support. The result is one coordinated plan that helps older adults navigate treatment, recovery and life beyond cancer — with greater strength, function and dignity.




**Every Specialist You Need. Every Support That Matters.**
**One Coordinated Care Plan, Guided by Geriatric Expertise.**

- **Dr. Rajiv Rajendranath** – Lead - Geriatric Oncology & Sr. Medical Oncologist
- **Dr. P. Rajkumar** – Senior Surgical Oncologist
- **Dr. Kathiresan** – Senior Surgical Oncologist
- **Dr. Ramakrishnan** – Senior Consultant Surgical Oncologist Gastrointestinal Cancers
- **Dr. Arathi Surendranath** – Senior Radiation Oncologist
- **Dr. Vinod Kumar Selvaraj** – Medical Oncologist
- **Dr. Magesh R** – Senior Consultant Geriatrician
- **Dr. K. Vasanth** – Senior Consultant Geriatrician
- **Dr. K. Sakthi Kiruthika** – Consultant Geriatrician
- **Dr. Bharathi Srilatha** – Consultant Palliative Care

360° GERIATRIC CARE

- Medical Oncology
- Surgical Oncology
- Geriatric Medicine
- Palliative Care
- Psycho-Oncology
- Screening & De-Addiction
- Radiation Oncology
- Caregiver Counselling

CHENNAI | BENGALURU | COIMBATORE

HOSPITALS: T. NAGAR, ADAMBAKKAM

SNF & CLINICS: THORAIPAKKAM | RA PURAM | MOGAPPAIR | VELACHERY | ADYAR | ANNA NAGAR

INDIA'S 1ST MULTI-SPECIALITY HOSPITAL FOR SENIOR CITIZENS

+91 99 444 59 444